செ.வெ.எண்: 30 நாள்: 12.10.2021

**<u>தனித்தேர்வர்களுக்கு வழங்கப்படாத மதிப்பெண் சான்றிதழ்களை விநியோகித்தல்</u>**
**<u>செய்திக்குறிப்பு</u>**

கரூர், மாவட்ட எல்லைக்குட்பட்ட, மார்ச் 2014 முதல் செப்டம்பர் 2018 வரையிலான 15 பருவங்களுக்குரிய மேல்நிலைப்பொதுத் தேர்வுக்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்களை தேர்வு மையங்களில் நேரடியாக பெற்றுக்கொள்ளபடாத உரிமை கோரப்படாத தனித்தேர்வர்களது அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் மார்ச் 2015, மார்ச் 2016, மார்ச் 2017 மற்றும் மார்ச் 2018 –ஆம் ஆண்டுக்களுக்கான மேல்நிலை தேர்விற்கு விண்ணப்பிக்கும் போது, நேரடி தனித்தேர்வர்களது விண்ணப்பங்களுடன் இணைத்துப் பெறப்பட்ட பத்தாம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் மாற்று சான்றிதழ்கள் ஆகியவை இவ்வலுவகத்தில் இருப்பில் உள்ளன.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பருவங்களுக்குரிய, மேல்நிலைத்தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களை இதுவரை பெறாத தனித்தேர்வர்கள் இந்த பத்திரிக்கை செய்தி வெளியிடப்படும் நாளில் இருந்து 90 நாட்களுக்குள் கரூர்-7, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம் கூடுதல் கட்டடம், அறை எண் 64 மற்றும் 65-இல் செயல்பட்டுவரும் அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட தனித்தேர்வர்கள் உரிய ஆளறிச் சான்று மற்றும் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுடன் நேரில் அனுகியோ அல்லது ரூ.42 மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய சுய முகவரி எழுதப்பட்ட உறையுடன் அனுப்பியோ உரிய மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் தேர்வுத்துறை விதிமுறைகளின்படி விநியோகிக்கப்படாத மதிப்பெண் சான்றிதழ்கள் கழிவுத்தாட்களாக கருதி அழிக்கப்படும் என்பதை இச்செய்திகுறிப்பின் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.

ஒம்…
மாவட்ட ஆட்சித்தலைவர்

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**

கரூர்